உ

முருகன் துணை.

சென்னிகுளம்-வித்வான்
அண்ணாமலை ரெட்டியாரால் இயற்றிய
ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிபேரில்

காவடிச்சிந்து.

மனோன்மணி விலாச புஸ்தகசாலை
போஸ்டு பாக்ஸ் நெம்பர் 141, கோலாலம்பூர் F. M. S.
அவர்கள் விருப்பத்தின்படி

சென்னை திருவொற்றியூர்
நாகை. சரவண முதலியா ரவர்களது
கலைமகள் விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது

இதன் விலை 1926 (அணா 2

175269

உ

வேலுமயிலுர்துணை.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிபேரில்

காவடிச்சிந்து.

இராகம்-நாட்டை-தாளம்-சாப்பு.

திருவுற் றிலகுகங்கை வரையிற் புகழ்மிகுந்து
திகழ்த்தின முறைந்த வாசனை மிகு
மகிமைச்சுகிர்ததொண்டர் நேசனைப் பல
தீயபாதக காரராகிய சூரர்யாவரு மாளவேசெய்து
சிரகக் கிரிபிளந்த வேலனை யுமை
தரகக் குழல் கொள்வஞ்சி பாலனை
மருவுற் றிணர்விரிந்து மதுபங் குலமுழங்க
மதுமொய்த் திழிகடம்ப தாரனை விக
சிதசித்ர சிகியுந்து வீரனை யெழில்
மாகநாக குமாரியாகிய மாதினோடு கிராதநாயகி
மருவப் புளகரும் தோளனை யெனை
யருமைப் பணிகொளுந் தயாளனை
தெரிதற் கரியமந்தி ரமதைத் தனதுதந்தை
செவியுட் புகழ்மொழித்த வாயனை யிள
ரவியிற் கதிர்சிறந்த காயனை யகன்
தேவநாடுகெடாதுநீடிய சேனைகாவல னாகவேவரு
திறலுற்ற சிவகந்த நாதனை விரி
மறையத் தொளிருகின்ற பாதனை
மருளற் றிடமினைந்து மனதிற் கனிசிறந்து
மதுரக் கனிவுவந்து கூடவே பல
விதழுற் றிலகுசிந்து பாடவே யலை
வாரிநீரினை வாரிமேல்வரு மாரிநேர்தரு மாமதாசல
வதனைப் பனிரண்டு தானையே நமக்
குதவப் பணிவமிந்த வேளையே

முருகன் துதி.

வேறு

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

சீர்வளர் பசுந்தோகை மயிலான் வள்ளி
செவ்விதழ லாதினிய ஒயிலான்

பேர்வளர் தடங்கையுறு மயிலாள் விமல
பொன்னடியை யின்னலற வுன்னுதல்செய் வாமே
குஞ்சர வனங் காவல் வீடா தபடி
கொஞ்சிமரு வுஞ்சரச ரஞ்சிதவி சேடா
பைஞ்சர வனங்காவல் வீடா வளரும்
பாலனென மாலையிடுகால நினை வாமே
வல்லவுணர வழியாதும் விட்டு வெருள்
வன்சமர்செய் கந்தனிடம் வழிபடுமை பட்டு
நல்லவுணர் வழியாது மட்டு மிஞ்சு
ஞானமர மானந்த மோனமதை வாமே
ஒருதங்க மாதங்க முகத்தான் மவழ்
உத்தம கனிட்டனென வுற்றிடு மகத்தான்
வருதங்க வாதங்க முகத்தான் எவரும்
வாழ்த்துகுக நாயகனை யேத்துதல் செய்வாமே

கழுகுமலை நகர்வளரும்

வேறு

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

தெள்ளுதமி ழுக்குதவு சீலன் தமிழ்
செப்பண்ணு மலைக்குமனு கூலன்
செழியப் புகழ்விளைத்த கழுகு மலை வளத்தைத்
தேனே சொல்லுவேனே
வெள்ளிமலை யொத்தபல மேடை முடி
மீதினிலே கட்டுகொடி யாடை யந்த
வெய்யவ னடத்திவரு துய்யவிர தப்புரியம்
விலகும் படியிலகும்
வீதிதொரு மாதிமறை வேதம் சிவ
வேதிபர்களோதுசாம கீதம் அதை
மின்னுமலர்க் காவதனிற் றுன்னுமடப் பூவையுடன்
விள்ளும் கிள்ளைப் புள்ளும்
சீதளமுகிற் குவமை கூறும் நின்ற
சிந்துரங்கள் சிந்துமதத் தாறும் உயிர்
சிந்திர நிகர்த்தமின்னா பற்றிபூசுங் குங்குமச்
சேறுங் காத நாறும்
நித்தநித்த மூங்கணவ ரோடுங் கூடி
நேசத்தாற் பிணங்கிமனம் வாடுங் கரு
நீலவிழி யார்வெருத்த கோலமணி மாலைரத்ன
நெருங்குமெத்த மருங்கும்

கத்துகடை லொத்த கடை வீதி முன்பு
கட்டுதரளப்பந்தலின் சோதி யெங்கும்
காட்டுவதா வீரிரண்டு கோட்டுமத யானையிற்பல்
களிறும் நிறம் வெளிறும்

முத்தமிழ்சேர் வித்வஜனக் கூட்டம் கலை
முற்றிலுமுணர்ந்திடுங்கொண் டாட்டாம் நெஞ்சில்
முன்னுகின்ற போதுதொறுந் தென்மலையின் மேவுகுறு
முனிக்கும் அச்சஞ் சனிக்கும்

எத்திசையும் போற்றுமம் ரூறும் அதில்
இந்திரன் கொலுவிருக்குஞ் சீறும் மெச்சு
மித்தநக ரந்தனை யடைந்தவர்க் கதும் வெறுத்
திருக்கும் அருவருக்கும்

துள்ளியெழு வெள்ளிமலை மடங்கும் படி
சுற்றுனும் வளைந்தவழ்ச் சிடங்கும் பல
சொர்னமலை போன்மதிலு மின்னுவதி னாலேபுகழ்
தோன்றும்லோக மூன்றும்

கள்ளவிழ் கடப்பமலர் வாகன் குறக்
கன்னியை விரும் பிடும்வி னோதன் வளர்
கழுகுமலை நகரின்வளமையென் னாவிலடங்
காதே படமாதே.

கோவில்வளம்

வேறு.

இராகம்,கமாஸ்-தாளம்-ரூபகம்.

சென்னி குளநகர் வாசன் தமிழ்
தேறும் அண்ணாமலை தாசன் செப்புஞ்
செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையிற்புனை
தீரன் அயில் வீரன்

வன்ன மயில் முரு கேசன் குற
வள்ளிபதம்பணி நேசன் உயிரை
வரமேதரு கழுகாசல பதிகோயிலின் வளநான்மற
வாதே சொல்வன் மாதே

கோபுரத்துத் தங்கத் தூவி தேவர்
கோபுரத்துக் கப்பால் மேவி கண்கள்
கூடப்பிர காசத்தொளி மாசற்றுவி லாசத்தோடு
குலவும்பு வியலவும்

நூபுரத்துத் தொனி வெடிக்கும் பத
நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் அங்கே
துழைவாரிடு முழவோசைகள் திசைமாசுண மிடியோவென
நோக்கும் படி தாக்கும்
சந்நிதியிற் றுஜஸ் தம்மம் விண்ணிற்
ருவிவருகின்ற கும்பம் எனுஞ்
சலராசியை வடிவார்பல கொடியீடிய முடிமீதிலே
தாங்கும் உயர்ந்தோங்கும்
உன்னதமாகிய விஞ்சி பொன்னாட்
டும்பர் நகருக்கு மிஞ்சி மிற
வுயர்வானது பெறலாமதில் அதிசீதள புயல்சாலவு
முறங்கும் குன்னிக் கறங்கும்
அருணகிரி நாவிற் பழக்கம் தரும்
மந்தத் திருப்புகழ் முழக்கம் பல
வடியார்கண மொழிபோதனி லமராபதி யிமையோர்செவி
யடைக்கும் அண்டம் உடைக்கும்
கருணை முருகனைப் போற்றி தங்கக்
காவடி தோளின்மே லேற்றி கொழுங்
கனலேறிய மெழுகாய்வரு பவரேவரு மிகவேகதி
காண்பார் இன்பம் பூண்பார்

கழுகுமலைவலம்

வேறு

இந்துஸ்தான்-காபி-தாளம்-சாப்பு.

பொன்னுலவு சின்னிகுள நன்னகரண் ணாமலைதன்
புந்தியின் மகிழ்ந்து நித்தம் நின்றவன் முத்தி
வெந்திறைலரக்கர்களை வென்றவன் மயில்

போலவெனலின் மீதுலாவு ராதமாதுமு னேகியேயடி அவ
பூவையே புனதுதஞ்ச மென்வன் வள்
ளீயமா விணைபு மென்று தின்றவன்

மின்னுலவு சொன்னமுடி சென்னியணி விண்ணவாதே பணி
றேந்திரனுஞ் சித்தர்களுந் துன்னியே கதி
வேண்டியே யகத்திலன்பு மன்னியே

வேலவன்கிரு பாகரன்குகன் மேவிடுங்கழு காசலந்தனில்
மிஞ்சியே வளங்களைநா னுன்னியே சொல்ல
ரஞ்சிதமாய்க் கேளடிவிற் பன்னியே

மூசிவண்டு வாசமண்டு காவின்மண்டு தேனையுண்டு
மோகனமுகாரி ராகம் பாடுமே மைய
லாசவே பேடையுடனே நாடுமே யலை

மோதுவாரிதி நீரைவாரிகின் மீதுலாவிய சீதளாக்
முகில்பெருஞ் சிகாமுற்று மூடுமே கண்டு
மயிலினஞ் சிறகைவிரித் தாடுமே

தேசுகொண்ட பாரதந்த வீரதும்பி ராகிபண்டர்
தேவதாரு வைக்கரத்தாற் பிடிக்குமே சற்று
மேவிய கிளையைவளைத் தொடிக்குமே யொளிர்

சேயசந்திர னுடுரிஞ்சுப லாமரங்களி லேநெருங்கிய
தீங்கனி மதுரசத்தை வடிக்குமே வந்தி
பாங்கினின் றதனையள்ளிக் குடிக்குமே

அந்திர முருவிவளர்ந் திந்திர னுலகுகடந்
தப்புறம்போய் நின்றசையுஞ் சந்தன மரங்
தம்பித மிலாதுகையால் வந்தன மெங்க

ளாறுமாமுக நாதனுக்கிடு மாரிபோல் விசாகமுற்றகண்
டத்தனையு நின்றுதலை சாய்க்குமே யண்டப்
பித்திகை தனிலுஞ்சென்று தேய்க்குமே

கந்தரத்தோ றுங்கிடந்து கந்தரப்ப யந்தொதுங்கக்
கர்ச்சனை புரியுந்திறற் சிங்கமே நெஞ்சி
லச்சமுற விண்ணுறைமா தங்கமே தடங்

காவிலேசில தாவிலேவளர் மாவிருண்டு வேகிருதர்கள்
கார்முக மேயுஞ்சனைக ளேறுமே யதில்
வார்மதுவால் வாரியுவர் மாறுமே

காலவடி வேனெடிய வாள்கொடிய நாகமுமிழ்
காரிபிணை வாரிகணை பானலே யன்ன
கூர்நயன வேடமின்னு மீனலே காக்குங்

காலைமேலேறி வோதுவார்கவ ணேடுமோமணி தேசுவீசவே
கதிரவன்ற னதுமுகஞ் சுழிக்குமே யவன்
குதிரையுஞ் கண்ணைச்சுருக்கி விழிச்துமே

ஓலமலி கோலநில வேலைசூல ஞாலமீதி
லுற்றவரின் பத்துடனே மானமே செல்ல
வைத்தபல சித்திரசோ பானமே யென்ன

ஒங்கு சோங்ககி னுங்கி லாங்கிகலி பாங்குநீங்கரு வேங்கைபூங்கழை
யான்றோடொன்று வம்புகொண்டு மீளுமே கோள்கள்
சென்று சென்று நின்று நின்று மீளுமே

வேறு.

இராகம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

புள்ளிக் கலபமயிற் பாகன் சத்தி
புதல்வனான கண யோகன் மலை
போலத்தான்றிரண்டு கோலப்பன்னிரண்டு வாகன்நல்விவேகன்

வள்ளிக்கிசைந்த முரு கேசன் அண்ணா
மலைக்கவிராஜன் மகிழ் நேசன் என்றும்
வாழுங்கழுகுமலை வாவிவளஞ்சொல்வேன்மாதே கேளிப்போதே

வெள்ளநாரைகொத்தும் வேளை தப்பி
மேற்கொண் டெழுந்துசின வாளை கதி
மீறிப்பாயுந் தோறுங்கிரிச் சாயுந் தென்னம்பாளை யுடன்குழை

தெள்ளும் பிள்ளையன்னப் பேடும் இளஞ்
சேவலானதுவு ஊடும் பின்பு
தேகமலர்த்தவிசிற்சாமத்தினில் நாடும் உறவாடும்

மின்னிக் குலவிமதி மானும் வரி
வெள்ளைப் பணில்ராசி தானும் மட
மின்னார் விழிகளென்ன மன்னுகெண்டை முத்தமனுமடமானும்

வன்னத் தாமரையைக் கண்டு வாயின்
மதுரராகம்பாடிக் கொண்டு மதி
மயங்கி பேட்டினுடன் முயங்கியே கிடக்குவண்டு கள்ளையுண்டு

அந்தரத்துப் பெண்கள் நாடி யங்கு
அன்பாகவே விளை யாடி செலலு
மன்னலார் நடக்குநன் னடைக்குறுகியன்னஞ் சொல்லும்பின்னும்

மந்த மேதியுள்ளே யெட்டும் சினை
வருலுவெழுந்தமே முட்டும் போது
மடிசுரந்துகந் தன்னினைத்து கண்டமட்டும் பாலைக்கொட்டும்

——

துதி வேறு

இராகம்-பியாக்-ஆதிதாளம்.

மரகத விகசித வொளிதவ ழிருசிறை
மருவிய மயின்மிசை யனுதின முறைதரு வாசன் பவ நாசன்
குரகத சுரமணி வளர்த நடவிய
குவலய சராசர னென்னுமத னெனுமகிழ கோலன் பரை வாலன்
பரிபுர வணிகலவென வொலிபுரி

பரிதியு தயமதி லவிழ்மறை மலர்நிகர் பாகன் குக நாதன்
திரிபுர மவையொரு கொடிதனி லெறிகொடு
சிறைவற நகைபுரி சிவன்மன மகிழுப தேசன் முரு கேசன்
பதுமநி தியினொடு பணிலநி தியுமெழில
பரவிய சுரவியு முருசர புரன்மகிழ் பாகன் கன யோகன்
சததள நளிந்த விசுமிசை வதியொரு
சதமுக வுதிசிறை பதிலுற நிறுவுநி சாகன் றவ வாகன்
குரைதிரை வரைநிறை புரகர வுலவிய
குரைவயினடுவுரை நிருதரை முடுகி கோபன் கமழ் நீபன்
பரைசிவ பகவதி யுதவிய சரவண
பவனறு முககுகன் மிசைமது ரிதகவி பாடுஞ் சுக நாடும்

துதி வேறு

இராகம்-ஆனந்தபைரவி-சாப்புதாளம்

பவனகிரி யதனுட்டானே மன்னுமானே
பாழிலேயலை யாமலின்புற நாளுமேயருள் மேவுகண்டு கொடு
பாராய் இன்னல் தீராய்
அவுணப் பகையைமுடித்தோனே புண்யவானே கதி
யாருமேதரு வாருமிங்கிலை யாதலாயினம்புரு
யூகுதே பண்ணுஞ்சூதே
விரகப்பெரு விதனத்தாலே மண்ணின்மேலே மனம்
வீணிலேயுழ லாதுகந்தவிசாகனேயுரி நீயும் வஞ்சமேன்
மீதே யென்னிடாதே
நரகச்சமன் வருமப் போதே பின்னில்லாதே
நாலுமேமற வாதுநின்சிறி பாதமாகிய கீதபங்கய
நானே உன்னினேனே
நிமலப் பெருமிதச் செங்கவேளே கன்னல் வேளே
நீடுபாணம் தான் மருண்டிடை வாடுமாதரி டங்கெடாவகை
நீயே யெண்ணு வாயே
குமரிக் கெதிபாற கானே நண்ணினானே யிதழ்
கோகிலாத தபோபலம்பெறு நீதாபாலகலா துறைந்தருள்
கோவே யென்னுள் வாயே
திடமற்றல னிடைச் சேயே யன்னை நீயே
சேவை யேசெரி ஞானபண்டிதர் நாவிலாடிளி தாவிரந்திடுந்
தேனே பொன்னானே

இராகம்-கன்னடா-ரூபகதாளம்.

துதி வேறு

செந்தின்மாநகர் வாழ் கந்த நாதனிரு
செய்யபாத கஞ்சமே நம
குய்யமேவு தஞ்சமே பின்றி,
செப்புவது சொஞ்சமே சேட்சத்
தீயபாதகவி ரோதமாயம் விட்டுத்
திரும்புவாயே நெஞ்சமே
பந்தபாசமிதை எந்தவேளையினும்
பார்க்கும்போது தொல்லையே யல்
லார்க்குமாவ தில்லையே யொரு
பாரமேரு வில்லையே கையித்
பற்றுநாதன் மாதுபெற்றநீசமீது
பனுவல் சூடு வல்லையே
மங்கைமார்களிரு அங்கமானபெரு
வாரணக் கொள் கும்பமே முகம்
பூர்ணச்சந்தர விம்பமே பட
மாசுணநி தம்பமே தொடை
காரவேளரசு மண்டபத் தருகில்
வைத்த ரண்டு கம்பமே
செங்கைசூரி யோதயங்குலாவ மலர்
சீதபத்ம தளமே
லோது சொற்கள் குளமே
திவ்ய பொற்ப வளமே யென்று
சிந்தித் தாற்குமரன் கந்தப் பாதமலர்
சேர்வ தெவ்வா றுளமே
வன்ன மானவிழி மின்னதே கடையில்
வக்ரதந்த சாயல் கொண்ட
வுக்கரதுங்க சிங்கமே யென்ன
மறலிதூதர் பொங்கமே
வந்தவேளை நெஞ்சே கந்தவேளைநினை
மருவுறுது பங்கமே யுற்று
சென்னிமாநக ரண்ணமலைக்கவிஞன்
தேசமெங்கு மிசையே!! பெறப்
பேசுகந்த இசையே சற்றுங்
தீர்ந்திடாத நசையே வைத்துச்
சேவலாளிபத் மாவலோடணி
தினமுறாது விசையே

சுரம் போக்கு நன்றாயிரங்கல்

இராகம்-பைரவி-அடதாளம்,

பாதிராத்திரி வேளையில் வீட்டுப்
பக்கத்தில் வந்து மேவிப் பஞ்ச
பாதக னொரு பாவி கையைப்
பாவையை மெள்ளக் கூவக்
பற்றிக்கூட்டிக் கொண்டேகி னான்பதை
பதைக்குதே யென் னாவி

சோதனைப் பிரகாரமா யென்னைத்
தொடர்ந்தே பெருந் தோஷம் எவர்
சூதினால்வந்த மோசம் இனி
தொலையுமோ பிள்ளைப் பாசம் இதைச்
சொல்வரேபரி யாசம்

தேனிலங்கிய காவந்திகழ்
சென்னிமாநகர் வாசன்
செய்யும் அண்ணாமலை தாசன்
செந்தமிழ்க்கரு ணேசன்
சிந்தனை செய்யுந் தொண்டர் தீவினை
தீர்த்திடுமுரு கேசன்

எனிலம்புகள் கழுகுமாமலை
நாயகன் பாண்டி நாட்டில் நெஞ்சில்
நாணம் விட்டுத்தன் பாட்டில் வெப்பம்
நண்ணிய பாலைக் காட்டில் மகன்
நடக்கவேண்டிமுன் னடக்கமாத் தெய்வம்
லபித்ததோ மண்டை யோட்டில்

மையல் கொண்டொரு தையல் பின்செல
வயது மீறின மாதோ இந்த
மார்க்கந் தோன்றின தேதே சென்ம
வாசனைப்பல னீதோ ஐயோ
மாதம் பத்துஞ் சுமந்து பெற்றவென்
வயிறுந் தானெரி யாதோ

செய்ய பஞ்சணை யும்பொறாது
சிவந்து கொப்பள மாகும் நெரிஞ்
சிப்பழமென்று நோகும் அவள்
சீரடி ரண்டும் வேகும் அடி
தீயுங் கானலிற் வேனிலாந்
தீயி லெப்படி போகும்

தேடினுங்கிடை யாததாகிய
திரவியக்கனு கூலம் போலெ
செனித்த பெண்ணுக்குச் சீலம் வேறே
திரும்பின தென்ன காலம் கிரி
யெய்தானோ விந்தர ஜாலம்
காடுசேர் கையிற் கரடிவேங்கைகள்
காட்டுமேயார வாரம் அதைக்
காதிற்கேட்வி சாரம் வைத்துக்
கலங்குவானந்த நேரம் என்றன்
காதலி தன்னை யாதரித் துயர்
காப்பது வேலன் பாரம்
இராகம்-சாவேரி-அடதாளம்,

தலைவி யிரங்கல்.

நேயமாய்ப்பணியன் ணாமலைக்கு நீதனைக்
கழுகுமலை நாதனை நெஞ்சில்
நினைக்க நினைக்கமீறி யெனைக்கொல்லுதே மனவேதனை
கோமளக்கடலி லேமிகுந்ததிரைக் கூட்டமே
அங்கமிலான் போ ராட்டமே நாதன்
கோரமே விளத்தாற் றீருமோ வெனக்கு வாட்டமே
வெள்ளத்திரையின்மேலே துள்ளித்திரியுஞ்சுறு மீனமே
யினியுமுண்டோ மானமே மன
தேக்கங்கொண்டதனா லேற்குதில்லையன்ன பானமே
அள்ளற் சுழிகறையுண் மெள்ளக்குலவிவரு மாமையே
கொடுமாசைத்தின் திசையே நாளு
மதிகரித்திடலா லவமதிக்குதிந்தச் சீமையே
பொங்குமேதுலர்க ளெங்கும்பரிமளிக்கும் புன்னையே
பெற்றுவளர்ந்த வன்னையே யெந்தப்
போதும் வைதுவைது மோதுகிருள்பாவி யன்னையே
தங்குதித்தலம்புரி யிங்கித வலம்புரிச் சங்கமே
தென்றலுமொரு சிங்கமே போலத்
தாக்கவே மயங்கி யேக்கமா மெல்லிதே னங்கமே
மங்கைமார்கள் தங்க ணேர்பவள வல்லியே
பிரியேனென்று சொல்லியே போன
வாசக்கடம்பன்வர நேசத்துடன் சொல்லுமோ பல்லியே
அங்கயத்தினிறை பங்கயத்துள்ளுறை யன்னமே
பிரியேனென்று முன்னமே கண்டு
யன்றுவார்த்தை சொன்ன யாசைக்காணேனே யின்னமே

தலைவி ஊடல்

வேறு.

இராகம்-தேசிகதோடி-ரூபகதாளம்.

ஆறுமுகவடி வேலவனைகலியாணமுஞ்செய்ய வில்லை சற்றுமச்ச
மில்லாமலே கைச்சரசத்துக் கழைக்கிறாயென்ன தொல்லை
மீறியவன்பிலாதபெண்ணோடே விளம்பாதேவீண்பேச்சு சும்மா
வெள்ளைத்தனமாகத் துள்ளுகிறாய்நெஞ்சில்வெட்கமெங்கேபோச்சு
மேட்டிமையென்னிடங்காட்டுகிறாயினிவேறிலையோஜோலிஇதை
வீட்டிலுள்ளோர்கொஞ்சங் கேட்டுவிட்டாலது பெத்தமெத்தகேலி
தாட்டிகனாசோகழு காசலமாநகர் தங்குமுருகோனே இந்திர
ஜாலத்தினால் லென்னைக் காலைப்பிடித்தாலுஞ் சம்மதியேனானே
அக்கரைக்காரற்கு புத்திகொஞ்சமென்பா ராரும்பழமொழியே
அப்படியென்னைப் பலாத்காரஞ்செய்திடில் ஆச்சுதுபெண்பழியே
சர்க்கரைகட்டிபோல்வள்ளி தெய்வானையாந்தையலுனக்கிலையே
இரண்டுதையலரைச்சாரும்பைய லுனக்கென்ன தானுமொருநிலையே
அம்புவியிற்சிறுபெண்களின்மேலுனக்காசை யேன்சாணுதையா
நீர்ஆக்கப்பொறுத்தாலு மாறப்பொறுதவர் ஆசைவேதாணுதையா
[illegible]ம்புமண்ணுவலை தாசன்பணியும் நளினமலர்ப்பாலாகொஞ்சம்
[illegible]ளைக்குமேலொரு ஆசைக்கயிற்கண்ணை நாட்டினாலாகாதா

பாங்கி தலையின் நிலைமையைகூறிதலைவனையழைத்தால்

வேறு.

இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

கண்ணாயிரம்படைத்த விண்ணூரிடந்தரித்த
கனவயிரப்படை யவன் மகளைச்சாருங் கர்த்தனே திருக்
கழுகுமலைப்பதி யனுதினமுற்றிலு சுத்தனே
அண்ணாமலைக்கிடர் களண்ணாதொழுதுமிக
வகமகிழ்த்தன கருணையளித்திடு ஐயனே திசை
யாவமும்வெட்டுற மயிலை நடத்திய துய்யனே
மின்னோ கமலமலர் பொன்னோவெனப்புகல
விகசிதரத்தின நகைகடரித்தொளிர் மெய்யினாள் கதி
விகசிவரத்தின வளையடுக்கிய கையினாள்
என்னேரமுமனதி லுன்மீதிலே சிந்தைகொண்
டெழுதியசித்திரமென மவுனத்தினி லிருக்கிறாள் வண்ணத்
திடுகிற புத்தமுதினையும் வெறுத்தறு வறுக்கிறாள்
கும்பத்தினைச் சினந்து அன்னைபினைத் தெழுந்து
கொடியிடைமுற்றிலு மொடியவலைத்தது அங்கேயே மனங்
குலவுசடப்பினில் வீணா துவைத்தனள் மங்கையே

செம்பொற் சிலம்புகள் புலம்பப் பெருந்தெருவிற்
றிகழ்தரு சிற்றில்கள் புரிவகை விட்டவள் நியங்கினாள்
திருவழகைக் கருவிழியி லிருத்தியே மயங்கினாள்
போராடுதற்குரிய கூரார் மலர்கணையெய்
புகழ்பெருசித்தச தனுவதனைப்பொரு புருவத்தாள் தவம்
புரிபவரைத் தனதடியில் விழப்புரி பருவத்தாள்
சீராக நின்மலனு பாராமுகமிலாது
திருவமுதக் கனியிதனை யழுத்தியே காரையா யிந்தத்
தெரிவையுளத் துணையலது பிடித்தவ பிடித்தவ ராரையா

தலைவி பாங்கியைத் தூதுவிடுதல்.

வேறு

இராகம்-தெலிகமுகாரி-அடதாளம்

பூமிமெச்சிடும் மண்ணுலைக்கோர்துணை யானவன்
மயில் வானவன் ஒரு கானவன் தினைத்
புனத்தைக் காக்கும்வள்ளி
வனத்தைப்பார்க்க மெள்ளப் போனவன்
சேமமுற்கழு காசலணை பயந் தேடுதே
மனம்வாடுதே கால்கள்தள் ளாடுதே
செங்கை தங்கிநின்ற சங்கினங்கள் கழன் றோடுதே
தென்றலானபுலி வந்துகோபமோடு சீறுதே
தடுமாறுதேகிதன் கோறுதே
தீமைபா மிருளிற் சோமனிலவு மீறுதே
குன்றமானபுயம ரண்டும் பூரிப்பைக் கொண்டுதே
தேவன் மண்டுதே வெப்பங் கண்டுதே மலர்க்
கொம்புபோல் மென்மருங்குலான துந் துவண்டுதே
உள்ள மெல்ல மெல்ல முருகனென்று நினைந் துருகுதே
முத்தங் கருகுதே கண்ணீர் பெருகுதே என்ற
னுச்சிக்கேரியமால் பித்தங்கிருகிறென்று வருகுதே
வள்ளமேவும் பசும்பாலுந் தேனும் மரு பெருகுதே
கசந்திருக்குதே துன்பம் பெருகுதே
வாருந் தாறுமாறாக கிறவே சோகமும் பருக்குதே
பாரமான சிந்தையோரம் வேடனம்பு பாயுதே
யுடல் தேயுதே மலர் தீயுதே கொடு
பாவியான மதி யாவிசோரவந்து காயுதே
மாரவேளினால் கோரமானதொழில் வாதையே
யெனுந் தீதையே தீரத் தூதையே
வாட்டந்தீர் குகனைக் கூட்டி வாடியடி கோதையே

பாங்கி தலையின் அவயத்தருசைசாற்றல்

வேறு

இராகம்-கல்யாணி-ஆதிதாளம்-சாப்பு.

சந்தவரை வந்த குக நாதா பரை
யந்திர ஞேன்மணியா பாதா மந்தர
நன்முக சளாட்சரவி நோதா
குழைக்காதா சூரர் வாதா வண
சஞ்சரி வெண்குஞ்சரி சமேதா
சேந்தி ழண்ணுமலையை யாளக் கொண்ட
கந்தவர விந்தமலர்த் தாளா கட்க
மந்திடி கடம்பணியுந் தோளா
நெடுநாளா மற வாளா வுனைத்
தேடோற்குயிற் பேடுருவங் கேளாய்
சந்தசாமி குந்தகுழன் மேகம் அவள்
சொந்தநாத லிந்துவிலோர் பாகம்
தும்புருவம் வில்லொடுசி நேகம்
தவயோகம் வென்ற னேகம் வஞ்ச
துஞ்சவிழி நஞ்சினிலும் வேகம்
சந்தமலி கின்றமுக விந்துதவே வன்னைத்
சாணை தலைடுசெவியென்ப தந்து கன்னம்
மதுச் நுணி நாசியின் ப சுந்து
சண்சிந்து தல்பொ ருந்து சிறு
முபகம் துப்பாமிதழ்ச்சி வந்து
செங்குமுத புட்பமதை யொத்த மொழித்
தேனுல்வும் வாய்கையே முத்து கண்டஞ்
சீதரனூதுவர நத்து
சொற்றித் தித்துப் பாகைக் கத்து விடச்
செய்யுமென வுண்ணலாமு பத்து
குங்குமவா கங்கசகோ தண்டம் முன்கை
கோமரகவாழுவமை விண்டம் கையைக்
கோகைமோவெனம ருண்டம்
ஆழிமண்டங் குலிக் குலிக் கண்டம் நெடுங்
குங்கெளிறு சிறுகெளித் துண்டம்
கட்டுகதிர் பட்டுமணி வம்பு கிழி
பட்டுவிழி விட்டிடவெ ழும்பு சிற
கட்டழகாம் வட்டபுட்ட சொம்பு
யானைக்கொம்பு சிவ சம்பு குடங்
கைக்கும்வளை யாத பொற் பாம்பு

வட்டமிழ் பசந் துளப பாலே செங்கன்
வளருசிற தவிசெனமேர் ராலே சிறு
வயிறுபயிர் சிற்றெரு போலே
விரைவாலேவெள்ள மேலே [illegible]
வந்தசுழி யுந்தியிடை நூலே
நரம்புகள் பெண்ணுக்கின்ன [illegible] [illegible]
தங்கநிறச் செங்கலித [illegible] [illegible]
தரட்குவமை கேட்கிலவை நண்டு
சினைகொண்டு வளர் பெண்டி- [illegible]
கணைக்காலெனுமி ரண்டு
பாடுதராசுயக்குதிகந் துகமே யணி
பரவுபரவடியினை புத்தகமே கடற்
பவளமதி தசவிரல்கள் சகமே
யரும்போ ருககே புக யுகமே மயிலை
பண்ணுமிளஞ் சாயலையர சகமே
மேனகையோ ேர்வசி யிந்தராணி செல்ல மிக்க
திரு முக்யகலை வாணி இந்த
மின்னரசி தன்னுருவங் காணி
னெஞ்சுநாணி மலர்ப் பாணி தலை
மீது குவித்துத் தொழுவார் பேணி
சேனையோடுவந்துகருங் காவி சண்டை
செய்ய கரும்புச் சிலைவைத் தேவி பம்பைச்
செய்யுமொரு ரூபமிலான் வாவி
எங்கடேவி யுட லாவி தனைத்
தீர்க்குமுளங் காத்திடுவாய் மேலி

தலைவன் வருத்தஞ்சாற்றல்

இராகம்-பைரவிதாளம்-ஆதி.

வனத்தினைமாவைத் தெள்ளியே யுண்ணும்
வாழ்க்கைக்குறக்குல வள்ளியே யுயிர்
வாங்கிடப்பிறந்திட கள்ளியே யிரு
மடமேருவை நிகராகிய புயமீதணி பலமாவணி
மாலைப்படரெனத் துள்ளியே விழ
வான்மதி வீந்தி யள்ளியே
கன்னத்தினிற்குயிற் சத்தமே கேட்ச
கன்ற ஆபாசென்றன் சித்தமே மயக்
கஞ்செய்யுதே யாசைப் பித்தமே யுடக்

கனலேறியனை மொழுகாயி
தினியாகிலு மடிபாதகி
கட்டாயம நீயொரு முத்தமே தந்தால்
கைதொழுவேனுனை சித்தமே

வாடியிருப்பது வஞ்சமோ பொல்லா
வன்கருங்கல்லோவுன் நெஞ்சமே கொண்ட
மையற்பயிக்கியங் கொஞ்சமோ சிலை
மதன்சோதரி யெனையாதரி மனவாழ்க்கையில் சுகமாகிய
மார்க்கமுனக்கென்ன வஞ்சமோ ஒரு
வார்த்தையுரைக்கவும் பஞ்சமோ

தேடக்கிடையாத சொர்ணமே உயிர்
சித்திரமேடை வர்ணமே அந்தர
சிக்குது பார்த்தி ரன்னமே யொரு
சிலையேற்குற மகளாகுமின் கயலம்விழி யனையேதுயர்
செய்வதுகண்டிலை பின்னமே என்ன
செய்தேனோ நான்பழி முன்னமே

தலைவனை கலந்த தலைவி பாங்கிக்குக்கூறல்.

இராகம்-தோடி-தாளம்-சாப்பு.

செந்தின்மாநக ரந்தனில்மேவியே
தேசிகனுமுரு கேசன் மயில்
வாசியேறுமுல் லாசன் சிறு
திங்களும்பணை ங்கமாசுன
முந்திலங்கிய கங்கையாரோடு
செஞ்சிருடைய சிவனார்சேவி
சேமுன்னோதுப தேசன் அடி
யார்தமையள்விசு வாசன்

எந்தநேரமும் வர்தனை செய்தபடி
எண்ணும் அண்ணமலை தாசன் றுதி
பண்ணும்மெஞ்ஞான விலாசன் என்னோ
டிங்கெழுந்து தபங்கு மாலையில்
வந்துவண்டு முழங்கு மாலையில்
லின் பசாசர மகியநாடக
மன்புடனே செய்தான் மானே அந்தச்
சப்ரமமென்னசொல் வேனே

மங்கைமார்பலரும்புடைசூழ்தர
மாமலர் கொய்திடச் சென்றேன் அங்கோர்
பூமரத்தே தனி நின்றேன் சந்தர
மண்டலங்களை வென்றவாகன
மைந்தொடொன்று மிகுந்துவர்ர் மது
வண்டலோடு கடம்பெனுமாரமும்
வாரமுந் தோன்றிடச் சேர்ந்தான் என்
சீரைப்பார்த்தே களி கூர்ந்தான்
பங்கயாசன மேலுறை நால்முகப்
பாதகனுமலர்க் கைதான் கொண்டுன்
சோதியை யெப்படிச் செய்தான் அடி
பஞ்சுரஞ்சினு மஞ்சுசீரடி
கொஞ்சு ரஞ்சித வஞ்சியே புவி
பட்டுநீ நிற்க வொண்ணுதென்று
பண்மலர் மெத்தையொன் றிட்டான் பின்பு
மென்மலரெந்தன் கைதொட்டான்

வாவி விளம்

கன்னல்சூழ்பலனம் புடைசூழ் கழு
காசலந்தனில் வாழ்பிர தாபனே கன
வாசமெங்கும் கமழ்கின்ற பனே வள
காதலோடிரு போகிலும்பல
போதினுர்பணி வார்மனத்துறை
காரிடருட்குலை நீங்கிய தீபனே அதி
சூரபத்மனைத் தாக்கிய கோபனே
சென்னிமாநகர் வாழுமண்ணுமலை
செப்புஞ் செந்தமிழுக்கதி நேசனே சிவ
சுப்ரமண்ய னெனும்பிர காசனே கொடுஞ்
சிந்தைநைந்து புலம்பிநின்றிரு
மந்திரந்தனில் வந்தடைந்தனை
சேவிக்குங்குண மென்றெனக் காகுமோ மிகு
பாவிக்குந் துயரெப்படி போகுமோ
வந்தவர்க்குப் பழம்புளிக் காடியே
தந்திடச்சகி யார்தமைக் கேடியே
பந்தமெத்தனை யெத்தனை கோடியே
வாழையின் பழமோ கனிந்திடு
மாழையின் சனியோ வெனும்படி
மதுரிதம்பெறவே க்தம் பாடியே யொரு
பரிசும் பெறுதுளம் வாடியே

வெந்தரைக்குள் வெடிப்பிடைப் பாலையே
சிந்து பித்தைரப்போல் வெறும் வேலையே
வீணான விளங்குன்றண்டைக் காலையே எந்த
வேளையுன்துதி கூறவந்துயர்
நீளுவெம்பவ மாதவம்புரி
வல்வவேணிசேற் கற்பகச் சோலையே

தலைவியின் ஊடல்

செந்தூர் வளர்முக நாதா அருணோதயம்
செந்தாமரை நிகரும் பாதா
சிந்தையி லண்ணாமலை செய்
நிந்தையை யெண்ணாதருள்செய்
சித்திர வேற்கரவி நோதா வீடுதேறுஞ்
சரசங்கொண்டாடுவதே பாடு வந்துன்
றன்னுடனே சேர்பிரியக்
கன்னியர்கள் பேர்வரியச்
சாஸ்திரம் வேணுமோவெள் ளோடு தனித்தோரிடஞ்
சயங்கியே மேயமே வெள் ளாடு
வசையர் வாசலிலே சென்று தம்பலங்களை
வெட்கமில்லாமல் வாங்கி மென்று தின்று
மெத்தப் பயித்தியங்கொண்டு
சுற்றத் திரிந்தே மருண்டு
வீடுதேடி வந்தாயே இன்றுதொடவேமாட்டேன்
வேணுமென்றாலும் போடு கொன்று
ஆசைகொண்டவருக்கு ரோசங்கிடையாதென்பார்
அப்படிக் காகில் விசு வாசம் வைக்கும்
அந்தவிலைப் பெண்டுகளைக்
சொந்தமெனக் கொண்டனையே
யாணாலு முன்னைப்போலே மோசம் போனவருண்டோ
ஆருஞ் செய்கிறாரே பிரகாசம்
கந்தா செய்யாதே பல வந்தம் புதுமலரைக்
கசக்கியறிவார்களே கந்தம் சற்றுங்
காதலில்லாமற்சினந்தார்
கையை வலியப்பிடித்துக்
கசக்கினாலாமோசுகா நந்தம் உனக்கெங்கும்
எந்தப் பிறப்பினுமே வல்லி யுனையல்லாமல்
எவளையும் பாரேனென்று சொல்லி

எத்தனை பரத்தையரோ
நித்தமுநீ நத்தினையோ
இப்படிக் காசிகஞ்சி டில்லி கன்யாகுமரி
எங்குப் பார்த்தாலு மில்லை சல்லி
கங்குகரையில்லையே ஜாடைசொல்லி வைபவர்
காக்கவல்லவா வென்பாலே
சேர்க்கையிலாதே யன்பாலே
தாத்தாயே வேசைபாதர் மேடை கைவசமாமோ
கலப்புல்லுந் தின்றாலுமே காடை
குங்குமஞ் சந்தனஞ்சவ் வாது
குமுகுமென்றே புயத்தின் மீது வாசங்
கொட்டுதெழு னெற்றிசந்தப்
பொட்டுடொடு பகட்டுதிந்த
கோகிலம் புதிதாய்வந்த கேது நடந்ததெல்லாங்
கொஞ்சஞ் சொல்வாய் பண்ணுகே சூது

தலைவி வருந்துதல்.

பாளைவாய் கமுகில்வந்து வாளையாய் வயல்சூழ் செந்தூர்
பாலன் புரியவந்து புண்ணியா
காலையுஞ் செய்கிறாய் முன்பின்னெண்ணியா
வேளையோ விடிந்துதையா நாளைவாரே னின்றுகையை
விட்டிடெனறாலும் விடாமற் பிடிக்கிறாய் பாலை
யொட்டவே மடுமரித்து குடிக்கிறாய்
நித்தமும் அண்ணாமலைசெய் முற்றமெண்ணா வேலாகண்டோர்
நின்னிதழ் பவழங்களில் வெள்ளைசே தென்றா
லென்சொல்வேனா னொருபெண் பிள்ளையே
மக்கநிகர் புயத்தின்மேலே மெத்தகரவாசைப்பட்டு
மர்லைப்பிறை போலவொளி தோனுதே இது
கேலித்துரையாகுமென்று காணுதே
உன்னையும் விவாகமில்லா வென்னையுமே யன்னை கண்டா
லொன்றுஞ் சொல்லிடாளே அடாபாவியே
தின்றிடுவே னென்பாள் பக்சை நாவியே
சன்னல்சாடை யாகவந்தென் றன்னைக்கண்டி போவீரென்று
சாற்றிடுவே னுண்மையான சொல்லையே
கூற்றுவன்போல் வந்தாயென்ன தொல்லையே
சாருசேர் கரும்புருசி யாருந்தாலும்வேறொடு
தான்பறித்துத் தின்னுவது ஞாயமோ
ஆண்பிள்ளைக் கிதுதான்சம்பர தாயமோ

நூறு நூறாயிரந்தரம் மாறிமாறி யேபிறந்து
நோகுதே எத்தனுடைய உள்ளமே சித்தம்
போகுதே பலவாய் வுந்தன் கள்ளமே

நன்றாய் தலைமகளின் வேற்றுமைகண்டு வினாவுதல்.

என்னடி நான்பெற்ற மங்கை இள நங்கை வுடல் சங்கை என்ன
இப்படியாயிற்றே செங்கை வளை
யிடர்பெற்றிட வடைபட்டன நடைகெட்டதுன்னுடயிற்பல
வெய்தின சந்தனப் புள்ளி என்ன
செய்தாயோ சொல்லடி கள்ளி
அன்னவயற் செந்தூர் வாசன் மந்தகாசன் அனறர்நேசன் நாளும்
அண்ணாமலைக்கவி ராசன் பாடும்
அமுதச்சுவை தருமுத்தமிழ் களபத்தோடு கமழ் பொற்புயம்
அற்புத வேலவன்செய் ஜாலம் தன்னால்
கற்பழிந்தாயோவிக் காலம்
சித்தசன் மெச்சிடும் நூலை யந்திமாலை யோடு காலை வைத்துச்
சிந்திப்பதாச்சுதுன் வேலை
யின்னத்தனமா வஞ்சியே யுன்னைப் பணிவோடு கெஞ்சியே
சேவற்கொடியோன் பூஞ் சோலை தனில்
தேடியேவந்திட்டானோ மாலை
மெத்தப்பிரமைகொண்டேங்கி மனமோங்கி நேசப்பாங்கி மாரை
விட்டுக்தனியாக நீங்கி வாடி
வேலுக்கதிபதி எண்ணியே மேலிட்டலறிய கன்னியே
வெட்கத்தைப் போக்கடித் தாயோ யிழி
வேசைத்தனம் படித்தாயோ
இன்னம் விவாகமேயில்லை கமழ்கொல்லை வெடிமுல்லை சூழ
லெங்குஞ் சிங்காரித்து மில்லை சந்த
மினிதாகிய சளபந்தனை கனமேருவி லணிகின்றணை
இப்படியே தலை விதியோ பெண்ணே
செப்படியோ யிது மதியோ
சன்னதமாகுமோர் பேயெ பிடித்தாயே வேப்பங்காயே போலச்
சாதம் வெறுத்தாயே நீயே பெருஞ்
சண்டாளியே கண்டோர்திரள் கொண்டேபழி விண்டாரகம
சாதிக்கொல்லா மொரு வடுவே
தான்பிறந்தாய் வந்து நடுவே
வண்ணப்பயிரவி தோடி ராகம்பாடி யுறவாடி யுன்முன்
வந்துதினம் விளை யாடி எங்கும்
வையகத்திலுது உறியா அந்த
வாலமகனுக்கும் வெறியா

எண்ணங் குமரவேல் பாலே சென்றதாயே யினிகேளே பழி
எப்படியு முன்றன் மேலே வரு
மென்றேனென துளமஞ்சுது நன்றே கசால்லென வஞ்சக
மில்லைக் கிழவன்சொல் வீணைக் காரர்க்
கேற்காதென்றாலுங்கண் ணாணை

தலைவனிடத் தலைவி வருந்தல்

வேறு.

மஞ்சுநிகர் குந்தளமின்னே சத்தளங்கள் விகசிதஞ்செய்
வாரிசாதனத்தில்வாழ் பொன்னே செய்ய
வன்னமேயொளிர் சொன்னமேநடை
யன்னமேயிடை பின்னமேபெற
வந்தகுறபாரவஞ்சியே அதிவிருப்பத்துடனுரைக்கும்
வார்த்தையைக்கேளாசை மிஞ்சியே
அஞ்சுவயதான பருவந்தன்னிலெனது சிறுமணமுங்
அங்கஜவேள் போலவுருவம் பெற்றே
அன்றுவந்து நயந்துமாலையி நெஞ்சழிந்துமயக்கமேபுரி
ஆறுமுகவேலவனையே
நினைவுகொண்டே மதிமருண்டே
ஆறுதில்லை யென்னவினையே
சென்னிகுளமேவியவாசன் இனியதுதி யனுதினமுஞ்
செய்திடும் அண்ணாமலை தாசன் பாடுஞ்
சிந்துமீது மிகுந்தநேரமு றுஞ்கசீலகு வஞ்சரோருக
திவ்விய முகங்களாறுமே
கண்ணிற்கண்டாற் றுன்பங்ளெல்லாங்
காதவழி யோடிப் போகுமே

அண்ணாமலை ரெட்டியார் இயற்றிய காவடிச்சிந்து முற்றிற்று

திருப்புகழ் குப்புசாமி முதலியார் பாடிவருகின்ற

வேறு சந்தம்

வங்கார மார்பிலனி தாரொடுயர் கோடைசைய
கொந்தார மாலைசூழ லாரமொடு தோள்புரள
கண்காதி லோலைகதிர் போலஒளி வீசு இதழ் பலர்போலே
வஞ்சாடு சாபநுதல வாளனைய மேல்வழிகள்
மகாஞ்சார மோககிளி யாகநகை பேசியுத
காந்தாரைவாருமிரு ரீருறவே ளுசைமைய விடுமாதர்
மங்காளர் சூதுகொலை காரர்குடி கேடர் சுழற்
சிங்கார தோளர்பணி ஆசையுளர் காதிபிலா
சண்டாளர் சீச்சியவர் மாய யோட்டியே புழலாமல்

சங்கோதை நாதமொடு கூடிவெகு மாயை யிருள்
வெந்தோடே மூல மூல அழல் விசவுபதேசமது
கண்திரகலோதியிரு பாதமலர்சேர அருள் புரிவாயே

சிங்கார ரூபமயில் வாகன நமோநமென
கந்த ரகுமாரசிவ தேசிகா நமோநமென
இந்துர பார்வதி சுதாகர நமோநமென விருகோதை

சிந்தான சோதிகதிர் வேலவ நமோநமென
கங்கான வேணிகுருவானவ நமோநமென
தின்சூராழிமலை தூள்படமே வேலைவிடு முருகோனே

இங்கித வேதபிர மாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுவன மேவிவள்ளி நாகியை
இன்பான தேளிரச மாரமுகை விடாதகர மணிமார்பா

எண்டோளர் காதல்கொடு காதல்கறி யேபாரு
செங்காடு மேலிபுர காசமயில் மேலழகோ
டென்காத மாலைமுடி ஆறுமுகவாவமரர் பெருமாளே

பஞ்சரத்தினத்திருப்புகழ்.

மலடிவயிற்று மகன்போல யொரு புதையி லெடுத்த தனம்
போலே யொளிர் வயிரமடித்த களம்போல யிள மூலைமானார்
வலியணைத்த சுகம்போலே கதி ரொளிபிடு ரத்னவடம்போ
லேபரி வளமிகுபுட்ப வனம்போலே சுரநதிபோலே
அலைகடல் பெற்றிடு பெண்போலே வருபுலவர்தமக்கிரு கண்
போலேகரை வருகிலடுத்த சலம்போலே யுள தழகாமோ
அமுதுபுசிக்க ரசம்போலே திரைகடன்மடைவிட்டசலம்போ
லேதின மதிசயமுத்தமி ழன்பாலேதன் னருடாராய்
கலகனெற்சொல் சிலம்பாசிர்பெறுமலைமகள்பெற்ற குழந்தா
ய்மாமத கரிமுகனுக்கொரு தம்பீகானவர் மகளாமோர்
கடிமலர்மொய்த்த கரும்பேஞாலிகண் வனதுருசித்த கரும்
பேயானவா கவலை தணித்தொரு ளன்பே மாயவன் மருகோனே
குலிசன் மகட்கொரு நண்பாவேழிசை யளிகள் சுவைத்தகட
ம்பா போய்வரு குரைகடலுக்கொரு சம்பரனாய்வருவடிவேலா
கொடியதணிக்குமருந்தே தாள்பணி யமரர்தனக்கு விருந்தே
தோகைகொள் குருகுநடத்து தூங்கா வேரக முருகோனே
தேனைவடித்துச் சொரிந்ததோ கொதி பாலுடன் னெக்கக்
கலந்ததோ நல சினிபிலிட்டுப் பிசைந்ததோ பல கனிதாமோ
தேடியெடுத்துப் பிழிந்ததோநிறை பாகுபதத்திற் சமைந்த
தொலிவை சேரவுருட்டத் திரண்டதோநவ ரசமீதே

ஞான முளைத்துப் படர்ந்தோவதி லேயெழுபுட்பச் சுகந்த
தோமறை நாமக வித்தைப் பிரபஞ்சமோவென வுரைநாவல்
நாமலர் மெச்சிப் பணிந்து தாழவு நீயெனை மெச்சிக்கனிந்து
பேசவு நானுனை மெச்சிப் புகழ்ந்து பாடவு மருடாராய்
யானைமதப்பட் டெழுந்ததாமென மேயிரு பத்பச் சதங்கை
யோலிட வாருமுகத்துக் குழந்தையாயரு ளனைமார்பால்
ஆறுமுலைச்செப் பகுந்துபாலு ஞறுமலைக்கட்சொரிந் நவாறெ
னவாறுமுலைக்குட் சிரந்த பாலதி லமையாதோ
சோனைமவழக் சொத்திருந்தி லாவரு கிரசமுத்ரத் தரங்கமே
லெழு சூரியனொக்கத் திரிந்துலாவிய புதல்வோனே
சோலை மலைக்குக் கடம்புபோலவி ராலிமலைக்குக் கொழுந்து
போலுயர் ஸ்வாமிமலைக்குக் கடம்புபோல்வரு கோனே
கலியையசைத்துத் தொலைத்து விட்டொருபிணியையடித்துத்
துறத்தி விட்டெழு கவலைநெருப்பைதணித்து விட்டறநெறியாலே
கடினகசப்புக் கினிப்புவிட்டென துயரிலழுக்கைத்துடைத்து
விட்டொரு கருணைமழைக்கு குளிசுவிட்டினி யலையாதே
அலையுமனத்தைப் பிடித்துவைத்ததிலுறைபுமிட் டுக்கருக்க
வைத்தெனை யடிமைபடைக்கக் கருத்துமுறறிலு கினையாதே
மலைகள் பயப்பட் டொளிப்பதற்கொருபுகளிடமற்றுத்தவித்
துலர்கவும வடவரை மிக்குச் சலித்திருக்கவும் மதனாலே
குலவரை விட்டுத் திசைக்களிற்றினை புடலைமீதித்துக்கிழித்த
திற்சொரி குருதி குடித்துப் பெருத்தசெப்பிய முலையாளோர்
குறமகளைக்கைப்பிடித்து மற்றொருதுரைமகளைக் கைபிடித்த
துமிக்குள குளபிரியைக்கைப் பிடித்திருக்கு மெம் முருகோனே.

பஞ்சரத்தினத் திருப்புகழ் முற்றிற்று.

பார்விஜெகன்மோகன தி-குப்புசாமிமுதலியார் பாடிவருகிற

திருப்புகழ் வேறுசத்தம்

இசைந்த சூலம் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியுடை யாடையு மழுமானும்
அசைந்த தோடும் திங்களு மாலையும் முடிமீதே
அணிந்தயீசன் பரிவுடனருளிய குருநாதா
உகந்த சூரன் கிளையுடன் வேறர முனிவோனே
உகந்தபாசக் கயிறொடு தூதர்கள் மெலியாதே
அசைந்தபோதென் றுயர்கெட மயில்மிசை வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே

திருப்புகழ் வேறு சந்தம்.

கருவினுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்க ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசிவாயவென்று தினமுநினை யாமல்நின்று
மறுசமய மீதிலொன்று மறியாமல்
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள்தலைவாசல்நின்று
அனுதினமு நாணமின்றி யழிவேனோ
உரகபட மேல்வளர்ந்த பெரியபெருமாளரங்க
முறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலென்று ஒருபொழுது தூதுசென்று
பரமனருளால்வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில்நின்ற பெருமாளே

காவடிச்சிந்து முற்றிற்று.

இகபரஞானசாகரத்திரட்டு.

மோக்ஷமார்க்கத்திற் கேற்ற பொக்கிஷம்

இது எல்லாருக்கும் அவசியமான ஒரு சிறந்த நூல் மனிவாழ்க்கைக்கு இன்றியமையாத நல்லொழுக்கத்தைபோதித்து ஞானமடையச் செய்வதே தெய்வத்தன்மை பொருந்திய நமதுமூதோர்களாகிய தாய்மானார், பட்டணத்தார், திருவள்ளுவர், ஔவை நாயன்மார், ஆழ்வாராதியர், பிரமங்கார், வேமன்னா, நந்தனார், பாம்பாட்டிசித்தார், குதம்பைசித்தர், சிவவாக்கியர், முதலியோர்களால்அருளிச்செய்துள்ள பல நூல்களினின்று சில முக்கியவிஷயங்களை இதிற் திரட்டியுள்ளன இவற்றை மனனஞ்செய்வதால் யாவரும்பாவச்செயல்களை அறமேவிடுத்துப் புண்ணியச்செயல் களை மேற்கொண்டு இகபரப்பேற்றினையடைந்து ய்யுமாறுலோகோபகாரமாக இப்புத்தகம் வெளியிடப்பட்டிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் இப்புத்தகம் அவசியம் இருக்கத்தக்கதாகும்.

இதன் விலை அணா 8.

எமதுவிலாசம்: டி. ஆர். கிருஷ்ணா அண்டு கோ,
திருவொற்றியூர் போஸ்டு மதராஸ்

அயத்தங்க திராவகம்

இதுவே தேகபோஷக காருண்ணிய சஞ்சிவி.

‘இருப்பவன் இரும்பைத் தின்பான் போகிறவன் பொன்னைத் தின்பான் என்னும் உலக வாக்கியத்தின்படி இரும்பின் சத்தையுட்கொள்பவர்களுக்கு, நரை, திரை முதலிய சரீரத்தளர்ச்சி அதிசீக்கிரத்தில் உண்டாகாதென்பதை யாவருமறிவார்கள். தாதுவிருத்தியை அதிகப்படுத்தி சரீரத்தை திடப்படுத்தக்கூடிய மருந்துகளில் இதைவிட சிறந்தது வேறொன்றுமில்லை. அயத்தினுடையவும் தங்கத்தினுடையவும் சத்தைத் திராவகமாக இறக்கியிருக்கும் இந்தப் பரமசிரேஷ்டமான ஔஷதத்தை உட்கொள்பவர் தேகம் வஜ்ஜிர சரீரமாகுமென்பதை இங்குச் சொல்லவேண்டுவது அனாவசியம். ஒரு முறைவாங்கி உபயோகப்படுத்திய பின் யாவருக்கும் அதன்மகிமை விளங்கும்.

175269 77

இதன் முக்கிய குணங்களாவன.

நரைத்தமயிர் கருப்பாகும், உதிர்ந்தமயிரை முளைப்பிக்கும், கண், கைகால் எரிச்சலைப் போக்கும், முகவஜீகரத்தை யுண்டாக்கும், தேக உஷ்ணத்தை அகற்றி வாயுவைக்கண்டிக்கும், கைகால் சோர்வைப்போக்கும், பலத்தையதிகரிக்கும், பித்தவாயுவைக் கண்டிக்கும், பசியையும் ஜீரணசக்தியையும் உண்டாக்கும், தளர்ந்துபோன நரம்புகளை வலிவுபடுத்தி முறுக்கேற்றும், நகக் கண்களிலும், விழிகளிலும் ரத்தமின்றி வெளுத்திருப்பதை நீக்கி ரத்தத்தைப் பரவச்செய்யும் பித்தகாமாலை, சோகை, குன்மம், கைகால்வீக்கம், மஞ்சள் காமாலை, குடல்வாதம் இவைகளை எட்டேநாளில் போக்கும், இரத்தவிருத்தியையும் சம்போகசக்தியையும் உண்டாக்கும், பால்யர் முதல், ஆண்பெண் இருபாலரும் உட்கொள்ளலாம்

20-நாள் சாப்பிடக்கூடிய புட்டி 1-க்கு ரூ 1 2 0
40-நாள் சாப்பிடக்கூடிய புட்டி 1-க்கு ரூ 2 0 0

(ஜெர்மனி) எய்கோ செண்ட்.

மனதிற்கு ஆனந்தத்தையும், இன்பத்தையும் விளைவித்து எவ்வித களியாட்டங்களிலும், சபைகளிலும், நல்ல வாசனை கமழ்ந்து, யாவரையும் மகிழ்விக்கச் செய்வதற்கு இந்த எய்கோ சென்ட்டைத்தவிர சிறந்தவஸ்து வேறொன்றுமில்லையென்பதை யாவருமரிவார்கள். இதில் புலவித புஷ்ப ஜாதிகளின் வாசனை சதா நிரம்பியிருத்தலால் ஒரு முறை கைகுட்டைகளிலாவது, சொக்காய்களிலாவது, சில துளிகள் விட்டுக்கொண்டால் 4-நாட்கள் வரையிலும் அதன் வாசனை நீங்காது.

½-டிராம் புட்டி 1-க்கு அணா 10. 1-டிராம் புட்டி 1-க்கு ரூபா 1.

அதிக விரைவிலும் சுலபத்திலும் ஆங்கிலம் கற்றுக் கொள்ளச் செய்யும் சிறந்த நூல் எது ?

ஆங்கில போதகன்

இப்புத்தகத்தைப்போல் ஆங்கில பாஷையைப் போதிக்கும் நூல் இதுவரையில் வெளிவந்ததில்லை. இதை வாசித்தால் சில மாதங்களில் ஆங்கிலம் எழுதவும் பேசவும் நன்றாய்க் கற்றுக்கொள்ளலாம். இதற்கு உபாத்தியாயர் தேவையில்லை. இதில் ஆங்கில எழுத்துக்களையும் பதங்களையும் தமிழில் உச்சரிக்கும் விதங்களைக் காட்டி ஆங்கில பாஷையிலுள்ள இரண்டெழுத்துச் சொற்கள்முதல் பலவெழுத்துச் சொற்களையும் விவரித்து அவற்றிற்குச்சரியான தமிழ் அருத்தங்களையும் தெளிவாய் எழுதி இருப்பதுடன் அவ்வப் பதங்களைக்கொண்ட வாக்கியங்களையும் படிப்படியாக வெகு சுலபமாய் யாவரும் அறியும்படி எழுதப் பட்டிருக்கின்றன.

மிருகங்கள், பட்சிகள், வீட்டுச் சாமான்கள், உணவுப் பொருள்கள் குடும்ப விவகாரங்கள், வியாபார விஷயங்கள், தேகாரோக்கியம், சரீரக்கூறுகள், உத்தியோக விஷயம், நீதிஸ்தானம் முதலிய அரசாங்க விவகாரங்கள், சிநேக சம்பாஷணைகள், கடிதமெழுதும் முறைகள், கிராமாதிசயங்கள் பட்டண வாழ்க்கை, தொழிற்சம்பந்தமான விஷயங்கள், விண்ணப்பங்கள், கலியாண முதலிய சுப விகிதங்கள், சிறு கதைகள், இன்னும் பிற விஷயங்களும் சலபமான நடையில் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

இது ஆங்கிலம் கற்க அவாவுறும் ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்குமாத்திரமன்றி கிராமாதிகாரிகள், கணக்கப்பிள்ளைகள், தோட்டக் கங்காணிகள், கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் இராணுவ சிப்பாய்கள், வியாபாரிகள், ஐரோப்பியரிடமிருக்கும் தொழிலாளர்கள் முதலிய யாவருக்கும் மிகவும் அவசியமானது.

உயர்ந்த கிளேஸ் கடிதம் காலிகோ பைண்டு புத்தகம் 1-க்கு ரூ. 2 0 0

தென்னாட்டில் தலைமைபெற்றுப் பிரகாசிக்கும் தமிழ் நாவல் எது ?

தலைவாங்கி

அபூர்வ சிந்தாமணி.

இஃது யாவராலும் நன்கு மதிக்கப்பெற்ற ஓர் அற்புதமான செந்தமிழ் நாவல். இதில் ஸ்திரீ, புருஷ, பாலக, பாலகிகளுக்கு இன்றியமையா அநேக அதியற்புத விஷயங்களும், பல நீதிகளும் ஒருங்கே யமைந்திருக்கின்றன. படிக்கப் படிக்கப் பரமானந்தத்தையும் கேட்கக் கேட்க இன்பத்தையும் தரும்படி மிகத் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றது. கதா நாயகி தன் ஆசான் உபதேசித்த மூன்று கேள்விகளினால் தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது அரசகுமாரர்களைக்கொன்று வீரப்பிரதாபத்துடனிருக்கையில், மெய்யழகனென்னும் ஓர் அரசிளங்குமரன் அவ்வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிந்துகொள்ளப் பல தேயங்கள் சென்று ஆங்காங்கு தனக்குற்ற இடையூறுகளினின்றும் நீங்கிக் கடைசியில் அபூர்வசிந்தாமணியை ஜெயிப்பது மிகவும் விந்தையாயிருக்கும். தற்காலத்தில் விருப்பத்திற்கேற்பச் சில அலங்கார நடைகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதுவரையில் 16-பதிப்புகள் அச்சிடப்பட்டு சிலவழிந்திருப்பதே இதன் மேன்மைக்கோர் அத்தாட்சியாகும்.

டபுல் க்ரௌன் 16-பேஜ் அளவில் 388-பக்கங்களுள்ள பெரிய புத்தகம் விலை ரூ. 1.

எமது விலாசம்:— **ஸ்ரீ பாரதி புத்தகசாலை,**

ஆனை போஸ்ட். சென்னை,